மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, கர்நாடகத்திலிருந்து நாம் மின்சாரம் வாங்குவது இல்லை. சொல்லப்போனால், கர்நாடகமும் நாமும் கேரளத்திலிருந்து தான் மின்சாரத்தை வாங்குகிறோம். கேரளத்திலிருந்து நாம் வாங்கும் மின்சாரத்தின் விலை யூனிட் ஒன்றுக்கு 28 பைசா ஆகிறது. ஆனால் 3 ஆண்டுகளுக்கு முன்னால் இது 18 பைசா என்று இருந்தது. ஒரு 5 ஆண்டுகளுக்கு முன்னால் இது யூனிட்டுக்கு 12 பைசா என்று கூட இருந்தது. அதற்கு இப்போது நாம் 28 பைசா வீதம் கொடுத்து வருகிறோம். அதிகரிக்க வேண்டும் என்று கேரள அரசு கேட்பதாகக் கர்நாடக அரசோடு பேசுகிறபோது விவரங்கள் வந்திருக்கின்றன. நாம் இன்னும் இதுபற்றி கேரள அரசோடு பேச்சுவார்த்தை நடத்தவில்லை.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, நிலக்கரிப் பற்றாக்குறையினால் அவ்வப்போது மின் உற்பத்தியில் தடங்கல் ஏற்படுவதால் நிலக்கரிச் சுரங்கத்தில் பங்கு கேட்கும் உத்தேசம் தமிழகத்திற்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இந்தப் பெரிய கேள்வியை தனிக் கேள்வியாகப் போடும்படி உறுப்பினர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, கேரளத்திலிருந்து கொடுக்கப்படும் மின்சாரத்தை நாம் எடுத்துக் கொண்டு வருவதற்குக் கூட சரியாக லைன்கள் இல்லை என்று சொல்கிறார்களே அது வாஸ்தவமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, எவ்வளவு கொடுத்தாலும் எடுத்துக் கொள்வதற்கு லைன்கள் இருக்கின்றன.

(முற்பகல் 9-10)

நீலகிரி மாவட்டத்தில் தொழிற்பேட்டைகள் ஆரம்பிக்கும் திட்டம்

*வினா எண். 24—திரு. கே. கல்லன் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்தில் தொழிற்பேட்டைகள் ஆரம்பிக்க அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது தொடங்கப்படும்?

[11 1982 பிப்ரவரி 4]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) மற்றும் (ஆ) : நீலகிரி மாவட்டத்தில், உதகமண்டலத்தில் ஹிந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ் நிறுவனம் வழங்கியுள்ள நிலப்பரப்பில், ஒரு தொழிற்பேட்டை ஆரம்பிக்க சிட்கோ தீர்மானித்துள்ளது. அதற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதற்கான கட்டிட வேலைகள் அக்டோபர் மாதம் சென்ற ஆண்டு ஆரம்பிக்கப் பட்டுள்ளன. அதன் முதற் கட்டமாக 10 சிறு தொழிற்கூடங் களும் 10 சின்னஞ் சிறிய தொழிற்கூடங்களும் (Tiny Sheds) நடப்பாண்டில் கட்டப்படும்.

திரு. கே. கல்லன் : இந்தத் தொழிற்கூடங்களை அலாட் செய்யும்போது அங்கே பரம்பரையாக வாழக் கூடிய மக்களுக்கும், மலைவாழ் மக்களுக்கும் முன் உரிமை அளிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : அதற்கென ஒரு தனிக் கமிட்டி இருக்கிறது. அப்படிப்பட்ட நண்பர்கள் விண்ணப் பிப்பார்களேயானால் தகுதி உள்ளவர்களாக இருந்தால் முன் உரிமை அளிக்கப்படும்.

திரு. எல். இளையபெருமாள் : அப்படிப்பட்டவர்கள் கேட் டால் கொடுக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார் கள். ஆனால் இதற்கு முன்னால் அமைக்கப்பட்ட தொழிற் கூடங்களுக்குக் கூட கேட்டிருந்தும் கொடுக்கப்படாமல் இருப்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? இப்படிப்பட்டதொரு அவல நிலை இருப்பதால் ஆரம்பக் கட்டத்திலேயே மலைவாழ் மக்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அல்லது பின்தங்கிய மக்களுக்கு ஒரு சதவீதம் கொடுக்க வேண்டும் என்று அந்தக் கமிட்டியாருக்கு முன் அறிவிப்புக் கொடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : என்னிடத்தில் அந்தத் தகவல் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவனப்படுத்தினால் அது கவனமாகப் பரிசீலிக்கப்படும்.

திரு. கு. ரமணி : நீலகிரி தொழில் வளர்ச்சி மிகவும் குறை வாக உள்ள இடம். அங்கே ஏராளமான தொழில் அற்றவர்கள் இருக்கிறார்கள். இந்தத் தொழிற் கூடங்களில் என்னென்ன விதமான தொழில்களை அமைக்கிறார்கள் ? பத்து தொழிற் கூடங்கள் அமைப்பதாகச் சொன்னார்கள். அதில் என்ஜினி யரிங் தொழில்கள் போன்ற தொழில்கள் அல்லாமல் மரங்களைக் கொண்டு அதிகப்படியாக வேலைகள் நடத்தக் கூடிய அளவில்— மலைகளில் மரங்கள் என்ற மூலப் பொருள்தான் அதிகமாகக் கிடைக்கின்றது. பல்வேறு விதமான தொழிற் கூடங்கள் அமைக்கப்படுமா? அவ்வாறு எவ்வளவு அமைக்கப்படும் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : முதற் கட்டமாக இருபது தொழிற் கூடங்கள் இந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ் நிறுவனத்திற்குத் தேவையான இணைத் தொழில்களுக்காகக் கட்டப்படுகின்றன. இரண்டாவது கட்டமாக இருபது தொழிற்கூடங்களை அதையொட்டியே துவங்க இருக்கிறோம். அப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கருத்து பரிசீலிக்கப்படும்.

திரு. என். கிட்டப்பா : நீலகிரியில் அமைக்கப்படுகிற தொழிற் கூடங்களில் அங்கே பணியாற்றக் கூடியவர்களை நியமிக்கும்போது வகுப்புவாரி பிரதிநிதித்துவ முறை அனுசரிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : இந்தக் கேள்வி சமூக நலத் துறை அமைச்சர் அவர்களிடம் கேட்கப்பட வேண்டும்.

திரு. மு. அரங்கநாதன் : உதகையில் ஆரம்பிக்கிற தொழிற் கூடங்களில் நீலகிரியில் முக்கியமாக விவசாயக் கருவிகள் தயார் செய்வதற்கு முதல் இடம் கொடுத்து ஆரம்பிக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : நான் ஏற்கனவே கூறியதுபோல் முதல் கட்டமாக இணைத் தொழில்களுக்கு முன் உரிமை கொடுக்கப்படுகிறது. இரண்டாவது கட்டமாக இருபது தொழிற் கூடங்கள் வருகிற நேரத்தில் அந்தத் திட்டங்கள் உகந்ததாக இருந்தால் முன் உரிமை அளிக்கப்படும்.

சேலம் மாவட்டத்திலுள்ள பட்டுப்புழு விற்பனை நிலையங்கள்.

*வினா எண் 25—திரு. செ. செம்மலை : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் பட்டுப்புழு விற்பனை நிலையம் (Cocoon Markets) எந்தெந்த இடங்களில் உள்ளது ?

(ஆ) அங்கே விலை நிர்ணயம் யாரால் செய்யப்படுகிறது?

(இ) சேலம் மாவட்டத்தில் பட்டுப்புழு வளர்த்தல் சம்பந்தமாக எடுக்கப்பட்டு வரும் தீவிர நடவடிக்கை யாது ?